காரைநகர்க் கலைமகள் மன்ற வெளியீடு இல. 1

உ

# திருப்பள்ளியெழுச்சியுரை

M. SATKUNAM, M. A.



காரைநகர்க் கலைமகள் மன்றம்

சார்வரி ஆண்டு] 1960 [கார்த்திகைத் திங்கள்

உ

சிவமயம்

# திருப்பள்ளியெழுச்சியுரை

M. SATKUNAM, M. A.



உரை ஆசிரியர்

ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேசிகர் அவர்கள்

முதற்பதிப்பு - 1960 கார்த்திகை.

அச்சுப்பதிவு:
நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை பதிவு செய்யப்பட்டது.

உ

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை.

எங்கள் சைவத் தமிழ் மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் சமய நூல்களையும் பிற நூல்களையும் இப்போது அச்சில் கிடையாத நூல்களையும் அச்சிட்டு அடக்க விலைக்குக் கொடுக்க வேண்டுமென்னும நோக்கத்தினையுடைய, "காரைநகர்க் கலைமகள் மன்ற"த்தார், தங்கள் முதல் வெளியீடாகத் திருப்பள்ளியெழுச்சியுரையை வெளியிட எண்ணினர். அவர்கள் என்மேற்கொண்ட அபிமானத்தினால், திருப்பள்ளியெழுச்சிக்கு ஓர் உரை எழுதித் தரும்படி கேட்டுக்கொண்டனர். அவர்களின் நோக்கத்திற்கு என்னாலியன்ற உதவி செய்யக்கருதிய யான் இவ்வுரையை எழுதலானேன். இதிலுள்ள குறைகளை நீக்கி நிறைவாக்கிக் கொள்ளுமாறு அறிஞர்களை வேண்டுகின்றேன்.

திருப்பள்ளியெழுச்சி என்பது திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்திலுள்ள ஒரு திருப்பதிகமாகும். "பள்ளியெழுந்தருளாயே" என்பதை ஈற்றில் கொண்டு முடிதலால் திருப்பள்ளியெழுச்சி என்னும் பெயருடையதாயிற்று. இது திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது. உண்டியும் உறக்கமும் எழுச்சியும் முதலியன உயிர்க்குணமாகலின், அவைகளினின்றும் இயல்பாகவே நீங்கிய இறைவரைத் துயிலெழுப்புவது ஒரு உபசாரவழக்கமாகும். அரசர் முதலிய பெருமக்களுக்குரிய உபசாரங்களைத்

தெய்வப் பேரரசராகிய இறைவர்க் கேற்றிக் கூறி அடிகள் மகிழ்வாராயினர்.

அகப்புறமாகிய கைக்கிளைத் திணைக்குப் புறனாகிய பாடாண்திணையில் "தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் - சூத ரேத்திய துயிலெடை நிலையும்" எனத் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட துறைக்கமையவே இத் திருப்பள்ளியெழுச்சிப் பதிகம் பொருந்தியுள்ளது. இறைவர் வேண்டுதல் வேண்டாமை இலராதலின், அடிகள் இறைவர்க்குத் தாவில் நல்லிசையையும் தமக்குப் பேரருளையும் வேண்டலால் கைக்கிளையாய், "சுட்டி யொருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்" என்ற அகத்திணை வழியினன்றி, "மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே" என்ற புறத்திணை வழியே பாட்டுடைத்தலைவர் பெயரும் நாடும் ஊரும் முதலியன விரவத் தொடுக்கப்பட்டமையால் புறனாகிய பாடாண்திணை ஆயிற்று.

பெரிய திருக்கோயில்களில் நாள்தோறும் விடியற் காலையில் முதலில் திருப்பள்ளியறையில் இறைவர்க்கு வழிபாடு செய்யும்போது இறைவரைத் துயிலெழுப்புவதாக இப்பதிகம் அமைந்துள்ளதென எண்ணலாம். ஆனால் மக்களது ஓராண்டு தேவர்களுக்கு ஒரு நாளெனக் கொள்ளும் முறையில், மக்களாண்டில் மகரம் முதல் மிதுனம் முடிவான உத்தராயண மாதங்களாறும் பகற் காலமாகவும், கர்க்கடகம் முதல் தனு முடிவான தக்ஷிணாயன மாதங்களாறும் இராக்காலமாகவும் கொள்ளப்படும். ஆகவே தக்ஷிணாயனத்தின் முடிவான தனுமாதம் புலரிக்

காலமாகின்றது. அதனாலேயே தனுமாதம் முழுவதும் எல்லாக் கோயில்களிலும் விடியற்காலத்தில் திருப்பள்ளியெழுச்சிப் பூசை நடைபெற்று வருகின்றது. இதனை அனுசரித்தே அடிகள் திருப்பள்ளியெழுச்சிப் பதிகம் அருளிச் செய்திருத்தல் வேண்டும். அடிகளது திருவுள்ளக் குறிப்பைக் கருதிப் போலும் தனுமாதத்தில் திருப்பள்ளியெழுச்சிப் பூசைக்கு முன் ஒவ்வொரு நாளும் இறைவர் சந்நிதியில் இத் திருப்பதிகம் ஓதப்படுகின்றது. ஆதலால் தனு மாதத்தில் நிகழும் திருப்பள்ளியெழுச்சிப் பூசைக்கும் இத் திருப்பதிகத்திற்கும் தொடர்புண்டெனக் கொள்வதே பொருந்துவதாகும்.

இத் திருப்பதிகத்தின் உட்பொருள் "திரோதான சுத்தி" எனக் கூறப்பட்டுள்ளது. திரோதானம் - மறைப்பு. சுத்தி - நீக்கம். இறைவர் உயிர்களுக்குச் செய்யும் ஐந்தொழிலில் திரோபவம் (மறைத்தல்) ஒன்று. அது உயிர்களைப் போகங்களில் திளைக்கச் செய்வது. அதனால் உயிர்கள் போகங்களில் உவர்ப்படைந்து அருள்வழியை நாடும்போது மறைப்பு நீங்கும். அம் மறைப்பினை இறைவரின் உறக்கமாகக் கொண்டு, அதனின் நீங்கி எங்கட்கருள வேண்டுமென வேண்டுவதே திருப்பள்ளியெழுச்சியாகும்.

திருப்பெருந்துறைப் புராணகாரர் "ஏர்மருவு பள்ளி எழுச்சி பணிவிடைகேட் - டார்வமுடன் ஆண்ட அரற் கன்பு செயுமியல்பே" எனக் கூறியுள்ளார். அது உயிர் இறைவரின் அருட்பணிக்கு அனுமதி பெற்று அவ்வழி நின்று அவர்க்கு அன்பு செய்வது, ஆதலால் அதனுடன் பள்ளியெழுச்சியின் குறிக்கோளாகிய மறைப்பு நீக்கத்தையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

சார்வரி - கார்த்திகை 6
21-11-60

**சி. சுப்பிரமணியதேசிகர்**
காரைநகர் - யாழ்ப்பாணம்.

திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை.

"நீறணிந்தா ரகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும் மாறவரும் திருப்பள்ளி யெழுச்சி"

திருத்தொண்டர் புராணம்

உலகைப் பற்றிய புறவிருள் நீங்கும்போது நடைபெறும் திருப்பள்ளி யெழுச்சியானது உயிர்களைப் பற்றிய மறைப்பாகிய இருளையும் போக்கும். ஆதலால் சைவ நெறியில் உறைப்புடைய பெரியார்கள் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை நியமமாக அதிகாலையில் ஓதும் வழக்கமுடையர். பெரிய கோயில்களில் திருப்பள்ளியெழுச்சி நாள்தோறும் ஓதும் வழக்கம் பண்டுதொட்டு நடைபெற்று வருகின்றது. தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் திருப்பள்ளியெழுச்சியும் ஒன்றாகும். இது மணிவாசகப் பெருமானால் திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது; திருவாசகத்தின் ஒருபகுதியாக உள்ளது. இதைப் பொருள் உணர்ந்து ஓதுதலினால் பெருநன்மை விளையுமென்று கருதி ஒரு சிறந்த உரையைத் தக்க விளக்கங்களுடன் பரோபகாரமாக எழுதியுதவியவர்கள்; சிறந்த நூல்களை வரன்முறையாகக் கற்று உணர்ந்தவர்களும், கற்றுங் கொழுகுபவர்களும், சிவபூஜா துரந்தரரும், சைவ ஆசாரியரும் ஆகிய ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்

ஆவர். அவர்களுக்குச் சைவத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையது.

சைவத் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ற நூல்களைத் தக்கார்களைக் கொண்டெழுதுவித்தும், மறைந்துபோகும் நிலையில் உள்ளனவற்றை உரியவர்களிடம் அநுமதிபெற்றும் வெளியிட்டு, சைவமும் தமிழும் பழம் பெருமையுடன் திகழ ஆவன செய்வதையே நோக்கமாகக் கொண்ட கலைமகள் மன்றம் தனது முதல் முயற்சியாகத் திருப்பள்ளியெழுச்சியுரையை வெளியிட நேர்ந்த வாய்ப்பு, தெய்வ ஆசியாக அமைந்துள்ளது. சைவத்துக்கும் தமிழுக்கும் தனி நாதனாகிய இறைவனைப் பள்ளியெழுப்பி இச்செயல் தொடங்கப்படுவதினால் எமது கருத்து முட்டின்றி நிறைவேறும் என்பது ஒருதலை. இப் பள்ளியெழுச்சியினால் சைவத் தமிழுலகம் உண்மையுணர்ந்து எமது செயலுக்கு ஆக்கம் தருமென எதிர்பார்க்கின்றோம்.

இந்த உரைப்பகுதியைப் படித்துப் பார்த்து மதிப்புரை எழுதியுதவி எங்கள் முயற்சியை ஊக்கிய சைவப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், குறுகிய கால எல்லையுள் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய நாமகள் அச்சகத்தாருக்கும், எங்கள் பணிவுடன் கூடிய நன்றி என்றும் உரியதாகுக.

**காரைநகர்க் கலைமகள் மன்றத்தார்.**

உ

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நல்கிய

## அணிந்துரை.

அறிவாற் சிவமேயாய மகான்களின் வாக்குக் களுக்கு மெய்யுரை காண்பது, சாதகராயினோருக்கே ஒரோர் அமயத்தில் ஓரளவு கைகூடுவதொன்றாயினும், கருவி நூல்களையும் பொருணூல்களையும் வரன்முறை பேணிப் பாடங்கேட்கும் பாக்கியம் படைத்தவர்கள், 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து' ஓதுவதற்கு ஒருவாறு உபகாரமான முறையில் மிக்க அச்சத்துடன் உரை செய்யும் ஒரு வழக்கம் இருந்து வருகிறது. அந்தவகையில் பலவேறு தகுதிப்பாடுகள் ஒருங்கு அமையும் வாய்ப்புப் பெற்றவர்களான எங்கள் தேசிக சிகாமணி அவர்கள் திருப்பள்ளியெழுச்சிக்கு ஒரு நல்லுரை வழங்கியிருக்கிறார்கள். இவ்வுரை இதுகாறும் அப்பகுதிக்கு எழுந்த உரைகளின் நலப்பாடுகளையும் தழுவிச் செந்தமிழ் வளங்கெழுமிச் சைவம் மிளிர்வதாய்ப் பொருள் உணர்ந்து ஓதி உருக முயல்வார்க்கு ஓர் ஊன்றுகோலாய் அமைந்திருக்கின்றது.

'என்வாழ்முதல்' 'கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' 'வீட்டிருந்து உணரும் நின்னடியார்' 'மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின் வணங்குகின்றார்' 'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' 'புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம்' இவைபோன்ற தொடர்கள் அநுபவமுதிர்விற் கனிந்த கனிகள். இக்கனிகளை வாழ்நாள் முழுவதும் சிந்தித்துச் சிந்தித்துச் சுவைத்து அழுதாறுவார்க்கு இவ்வுரையின் இன்றியமையாமை இனிது புலமாம்.

கலாசாலைவீதி, **சி. கணபதிப்பிள்ளை.**
திருநெல்வேலி. 26-11-50.

# திருப்பள்ளியெழுச்சியுரை

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண் (டு)
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்! எனை உடையாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே.

இதன் பொருள்: என் வாழ் முதல் ஆகிய பொருளே போற்றி- எனது வாழ்விற்கு முதற்பரம் பொருளா யுள்ளவரே! பாதுகாத்தருளுக; புலர்ந்தது- பொழுது விடிந்துவிட்டது; நின் பூ கழற்கு இணை துணை மலர் கொண்டு ஏற்றி - தேவரீருடைய அழகிய வீரக் கழ லணிந்த திருவடிகளுக்கு ஒத்தனவும் உதவுவனவும் ஆகிய பூக்களைக் கைகளிற் கொண்டு சாத்தி; திரு முகத்து எமக்கு அருள் மலரும் எழில் நகைகொண்டு-

தேவரீரது திருமுகத்தில் எங்களுக்கு அருள் விரிகின்ற அழகிய புன் முறுவலைப் பெற்று; நின் திரு அடிதொழுகோம்- தேவரீருடைய திருவடிகளை வணங்குவோம் (வணங்க வேண்டுதும் ஆதலால்); சேற்று இதழ் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ் திரு பெரும் துறை உறை சிவபெருமானே - சேற்றிலே அழகிய இதழ்களை உடைய தாமரை அரும்புகள் விரிகின்ற குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்பெருந் துறைக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற சிவ பெருமானே; உயர் ஏற்று கொடி உடையாய் - மேலான இடபக்கொடியை யுடையவரே; எனை உடையாய் - என்னை அடிமையாகக் கொண்டவரே; எம் பெருமான் - எங்கள் தலைவரே; பள்ளி எழுந்தருளாய் - துயில் நீங்கிப் படுக்கையினின்றும் எழுந்தருள் வீராக. என்பதாம்.

பின் "திருவடி தொழுகோம்" எனவருதலால் போற்றி என்பதற்குப் பாதுகாத்தருளுக என உரைக்கப்பட்டது. என் எமக்கு தொழுகோம் எனை என்பன ஒருமை பன்மை மயக்க வழுவமைதி. இணை- ஒப்பு. துணை - உதவுவது, உரியது. ஏத்தி என்பது எதுகை நோக்கித் திரிந்ததெனக் கொண்டு, வாழ்த்தி எனவும் உரைக்கலாம். பள்ளி - படுக்கை, துயில், இறைவர்க்குப் படுக்கையும் துயிலும் எழுச்சியும் இயம்புதல் உபசாரவழக்கு. தொழுகோம் - வணங்க விரும்புதும் ஆதலால் எழுந்தருளுக, என்க.

2. அருணனிந் திரன்திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரள்நிரை அறுபதம் முரல்வன; இவைஓர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லே!பள்ளி எழுந்தரு ளாயே.

இ—ள்: அருணன் இந்திரன் திசை அணுகினன் - செங்கதிரை யுடைய சூரியன் இந்திரனுக்குரிய கீழ்த் திசையை நெருங்கிவிட்டான்; இருள் அகன்று போயது - இருள் நீங்கிப் போய்விட்டது; நின் உதய மலர் திருமுகத்தின் கருணையின் சூரியன் எழ எழ - தேவரீரது உதயகாலத்துத் தாமரை மலர் போன்ற திருமுகத்திலேயுள்ள அருட்கதிரவன் மேற்பட்டுத் தோன்றத் தோன்ற; நயன கடிமலர் மலர - அன்பர்களின் கண்களாகிய இமைக்காவலையுடைய தாமரைப் பூக்கள் விரிதலும்; மற்று அண்ணல் அம் கண் ஆம் திரள் நிரை அறுபதம் முரல்வன - அக்கண்களினுள்ளே உள்ள பெருமை பொருந்திய அழகிய கருமணிப் பாவைகளாகிய திரண்ட வரிசையான வண்டுகள் தேவரீரைச் சார்ந்து தரிசிக்க விரும்பி ஆரவாரம் செய்கின்றன; இவை ஓர் - இந்நிகழ்ச்சிகளைக் கருதியருளுக; திரு பெரும் துறை உறை சிவபெருமானே - திருப்பெருந்துறைக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே; அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே - திருவருட் செல்வத்

தைத் தரும்பொருட்டு எழுந்தருளி வருகின்ற இன்ப மலையே; அலை கடலே - உலகமும் உயிரும் அலை போலத் தோன்றி ஒடுங்குதற்குரிய கடல் போன்ற வரே; பள்ளி எழுந்தருளாய் - துயில் நீங்கிப் படுக் கையினின்றும் எழுந்தருள்வீராக. எ—ம்.

"இருள் போய் அகன்றது" என்பது இருள் அகன்று போயது என விகுதி பிரித்துக் கூட்டப் பட்டது. கருணையின் சூரியன்-கருணையாகிய சூரியன். இன், தவிர்வழி வந்தது. கண்ணும் அறுபதம்- கரு மணிப்பாவையாகிய வண்டுகள். முரல்தல்-தரிசிக்க விரும்பி ஆரவாரம் செய்தல். அன்பர்களின் செயலைக் கண்மேலேற்றியது உபசாரம். ஓர்தல் - கருதுதல் ஓர் என்னும் இறுதிகெட்ட முன்னிலை வினைமுற்று ஓர்ந்து என எச்சப் பொருளதாய் எழுந்தருளாய் என்பதோடு முடிந்தது. மற்று என்பது முன் கூறிய நயனத்தினுள்ளே உள்ள கருமணிப் பாவையைக் குறித்தலால் பிறிதுபொருளில் வந்தது. நயனக்கடி மலர், கண்ணும் அறுபதம் என்னும் உருவகங்களை உவமையாகக் கொண்டு பிறபொருள் கூறுதல் சிறப்பன்று.

3\. கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத் (து)
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ!நற் செறிகழல் தாளிணை காட்டாய்

திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாய்! எமக் கெளியாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே.

இ-ள்: பூங்குயில் கூவின - அழகிய குயில்கள் கூவுகின்றன; கோழி கூவின - கோழிகள் கூவுகின்றன; குருகுகள் இயம்பின-மற்றைப் பறவைகளும் ஒலிசெய்கின்றன; சங்கம் இயம்பின-திருக்கோயிலில் சங்குகள் ஒலிக்கின்றன; தாரகை ஒளி ஒவின - விண் மீன்கள் ஒளி மறைகின்றன; (இந்நிகழ்ச்சிகளையுடைய விடியற்காலையில்) ஒளி உதயத்து நமக்கு விருப்பொடு ஒருப்படுகின்றது - ஒளியையுடைய உதயகாலத்தில் எங்களுக்கு மனம் தேவரீரை வழிபட விருப்பத்தினோடும் ஒருவழிப்படுகின்றது; தேவ - கடவுளே; நல்செறி கழல் தாள் இணை காட்டாய் - தேவரீருடைய நல்ல நெருங்கிய வீரக் கழல்களையுடைய திருவடிகள் இரண்டையும் காட்டியருளுக; திருபெரும்துறை உறை சிவபெருமானே- திருபெருந்துறைக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே; யாவரும் அறிவு அரியாய் - எவ்வகை மேம்பாட்டினரும் அறிதற்கு அரியவரே; எமக்கு எளியாய் - அடியோங்களுக்கு அருளால் எளிவந்து அருள் செய்பவரே; எம்பெருமான் - எங்கள் தலைவரே; பள்ளி எழுந்தருளாய் - துயில் நீங்கிப் படுக்கையினின்றும் எழுந்தருள்வீராக. எ-ம்.

கூவின இயம்பின ஒவின என இறந்த காலத்தால் நிகழ்காலத்தைக் கூறியது விரைவுபற்றியென்க. ஒருப்படுகின்றது என்பதற்கு ஏற்ற எழுவாய் வரு

விக்கப்பட்டது. புலரிக் காலத்தில் மனம் தெளிவாய் ஒருவழிப்பட்டு இறைவழிபாட்டை விரும்பும். ஒவ்வொருநாளையும் அறக்காலம் பொருட்காலம் இன்பக் காலம் அவற்றினீங்கிய(நித்திரைக்)காலம்எனப் பிரித்துக் கொள்ளும் முறையில் புலரிக்காலம் வழிபாட்டிற்குரிய அறக்காலமாதலறிக. நல் தாள் என இயையும். கல்வி கேள்வி அறிவின் பயனாகிய வீடு பேற்றினைத் தருதலால் நல் தாள் எனப்பட்டது. "கற்றதனா லாய பயனென்? கொல் வாலறிவன் - நற்றாள் தொழாஅர் எனின்" என்னும் திருக்குறள் அதனையுணர்த்தும். "யாவரும் அறிவரியாய்" என்பது "பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த - நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும் - மாவேறு சோதியும் வானவரும் தாமறியா" என அடிகள் அருளிய எவ்வகை மேம்பாட்டினரும் அறிதற் கரியவர் என்பதைக் குறிக்கும். காட்டாய் முற்றெச்சம். காட்ட எழுந்தருளாயென முடியும்.

4.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
 இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
 தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
 திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
 எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே.

இ-ள் இன் இசை வீணையர் யாழினர் ஒருபால் - இனிய ஒலியையுடைய (பாடலை அமைத்து வாசிக்கும்) வீணையை யுடையவர்களும் யாழையுடையவர்களும் ஒருபக்கலில் வந்துள்ளனர்; இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால் - வேதங்களையும் துதிப்பாடல் களையும் ஓதுகின்றவர்கள் ஒரு பக்கலில் வந்துள்ள னர்; துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால் - நெருங்கிய பிணைப்பினையுடைய பூமாலை ஏந்திய கைகளை யுடையவர் ஒருபக்கலில் வந்துள்ளனர்; தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால் - வணங்குபவர்களும் அன்பின் பெருக்கால் ஆற்றுது புலம்புவர்களும் கைகூப்பி மெய்கோட்டி நிற்ப வர்களும் ஒருபக்கலில் வந்துள்ளனர்; சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால் - தலைமேல் கைகளை அஞ்சலியாகக் குவித்தவர்கள் ஒருபக்கலில் வந்துள்ள னர்; திருபெருந்துறை உறை சிவபெருமானே - திருப்பெருந்துறைக் கோயிலில் எழுந்தருளியிருக் கின்ற சிவபெருமானே; என்னையும் ஆண்டுகொண்டு இன் அருள்புரியும் எம்பெருமான் - யாவதும் ஓர் பொருளல்லாத இழிவுடையேனையும் அடிமைக்கொண்டு இனிய அருளைச் செய்த எங்கள் தலைவரே; பள்ளி எழுந்தருளாய் - துயில் நீங்கிப் படுக்கையினின்றும் எழுந்தருள்வீராக. எ—ம்

இன்னிசை யாழுக்கும் இயையும். வீணையும் யாழும் நரம்பு எண்ணால் சிறிது வேறுபாடுடையன. இருக்கு - வேதம். தோத்திரம் - அருட்பா. இருக்கு மந்திரமெனில் தோத்திரத்துடன் இயம்புதல் வீணைக்கு இயையாது. துன்னிய பிணைமலர் - நெருங்கிய பிணைப்பை யுடைய பூமாலை. அது மார்பிலணியப்

படுவது. பிணையல் எனவும் படும். துவள்கை - கைகூப்பி மெய்கோட்டி நிற்கும்நிலை. இதனைக் குடந்தம்படல் என்பர்.

5. பூதங்கள் தோறும்நின் றுயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கோள் வயல்திருப் பெருந்துறை மன்னு!
சிந்தனைக் கும்அரி யாய்!எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே.

இ—ள்: புலவோர் - (உண்மை) அறிஞர்கள்; நினை, பூதங்கள் தோறும் நின்றுய் எனின் அல்லால் - தேவரீரைப் பூதப்பொருள்களான உயிர்ப்பொருள் உயிரில் பொருள்களாகிய எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்கின்றீர் என்று கூறிற் கூறுவர், அன்றியும்; போக்குஇலன் வரவு இலன் என - எங்கும் உள்ளீர் ஆதலால் போக்கும் வரவும் இல்லீர் என்று கூறிக் கொண்டு; கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் - இசைப் பாடல்களைப் பாடுதலும் அதற்கேற்ப ஆனந்தக் கூத்தாடுதலும் செய்வதைக் கேட்டும் கண்டும் அறிவோமன்றி; உனை கண்டு அறிவாரை கேட்டு அறியோம் - தேவரீரைத் தம் அறிவால் நேரில் பார்த்தறிந்தவர்களை நாங்கள் கேள்விப்பட்டும் அறியோம்; சீதம் கொள் வயல் திரு பெரும்துறை மன்னு -

குளிர்ச்சி பொருந்திய வயல் சூழ்ந்த திருப்பெருந் துறைக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அரசரே; சிந்தனைக்கும் அரியாய் - சொல்லுதற்கும் நினைத்தற் கும் அரியவரே; எங்கள் முன் வந்து - அடியேங்க ளுக்கு எதிரில் உருவத் திருமேனி கொண்டு வலிய எழுந்தருளிவந்து; ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு அருள் புரியும் எம்பெருமான் - குற்றங்கள் எல்லாவற்றையும் நீக்கி அடியேங்களை அடிமைக் கொண்டு அருள்புரிந்த எங்கள் தலைவரே; பள்ளி எழுந்தருளாய் - துயில் நீங்கிப் படுக்கையினின்றும் எழுந்தருள் வீராக. எ—ம்

நினைப் புலவோர் பூதங்கள் தோறும் நின்ருயென்பர்; போக்கிலன் வரவிலன் என்பர்; கீதங்கள் பாடுதல் ஆடுதல் செய்வர்; இவைகளைக் கேட்டும் கண்டும் அறிவோமன்றி, உனைக் கண்டறிவாரைக் கேட்டுமறியோம் என்க. புலவோர் என்றது மெய் யுணர்வினரை. உனைக் கண்டறிவாரை யாம் கண்ட றியோம்; இன்னவர் கண்டறிந்தவரெனப் பிறர் சொல்லக் கேட்டுமறியோம்; என்பார் கேட்டறியோம் என்ருர். கேட்டு என்பதில் எச்ச உம்மை தொக்கது. சிந்தனைக்கும் என்னும் உம்மையால் சொல்லுக்கும் என்பது வருவிக்கப்பட்டது. எங்கும் நிறைந்தவர், போக்குவரவு இல்லாதவர், காண்டற் கரியவர் சொல்லுதற் கரியவர், நினைத்தற்கரியவர், எங்கள் முன்வந்தது தமதருளாலென்க. போக்கு வரவு இறப் புப் பிறப்பு எனினுமாம்.

6. பப்பற வீட்டிருந் துணருநின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்;அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே.

இ-ள்: அணங்கின் மணவாளா - உமையம்மையாரின் நாயகரே; செப்பு உறு கமலங்கள் மலரும் தண்வயல் சூழ் திருபெரும்துறை உறை சிவபெருமானே-சிமிழ் போன்ற அரும்புகளையுடைய தாமரைகள் அலர்ந்துள்ள குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறைக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே; இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள் புரியும் எம்பெருமான் - எடுத்த இந்தப் பிறவியை நீக்கி எங்களை ஆட்கொண்டு அருள்செய்த எங்கள் தலைவரே; பப்பு அற வீட்டு இருந்து உணரும் நின் அடியார் வந்து பந்தனை அறுத்தார் - மனவிரிவு நீங்க (மனோலயமுண்டாக) வீட்டு நிலையிலிருந்து உண்மைதெளிந்தறிந்த தேவரீருடைய அடியவர்கள் தேவரீரை எய்தித் தங்கள் பாச பந்தத்தினை நீக்கிக்கொண்டனர்; அவர் பலரும் மைப்பு உறு கண்ணியர் மானுடத்து இயல்பின் வணங்குகின்றார் - அவர்கள் எல்லோரும் அஞ்சன மெழுதிய கண்களை உடையவர்களான மானுடத் தலைவியர் தம் நாயகரை வணங்கும் தன்மை

போல, தேவரீரைத் தம் நாயகராகக் கொண்டு நாயக நாயகி பாவகமாக வழிபடுகின்றனர்; (அவ் வின்ப வழிபாட்டையே யாமும் விரும்புகின்றோம்; ஆதலால்) பள்ளி எழுந்தருளாய் - துயில் நீங்கிப் படுக்கையினின்றும் எழுந்தருள்வீராக. எ - ம்.

பப்பு அற - ஒப்பின்றி என்றுமாம். விட்டிருந்து ணர்தல் விடுபட்ட (பற்றற்ற) நிலையிலிருந்து உண்மை தெளிந்தறிதல். செப்பு - சிவப்புமாம். மைப் புறுகண்ணியர் மானுடத்தியல்பின் வணங்குதல் மானுடமகளிர் தம் நாயகரிடம் அன்பு செய்து வழி படும் முறைபோல இறைவரை நாயகராகப் பாவித்து வழிபடுதல். "முன்னமவனுடைய நாமங் கேட்டாள்" என்று தொடங்கி அப்பரடிகள் வழிபட்டவாறு காண்க.

7. **அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)**
**அரிதென எளிதென அமரரும் அறியார்**
**இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே**
**எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்**
**மதுவளர் பொழில்திரு உத்தர கோச**
**மங்கையுள் ளாய்! திருப் பெருந்துறை மன்னு!**
**எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்**
**எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே.**

இ - ள்: அது பழச்சுவை என அமுது என அறிதற்கு, அரிது என எளிது என அமரரும் அறியார் - பரம் பொருளானது பழத்திற் சுவைபோல உலகெங்கும்

கலந்துள்ள தெனவும் நரை திரை மூப்புச் சாக்காடு களை நீக்கியருளுதலின் அமுதம் போலுள்ள தெனவும் தனதருளாலன்றி அறிதற்கு முடியாததெனவும் அன் பர்களுக்கு எளிவந்து அருளுவதெனவும் தேவர்களும் தமபோக மறைப்பினுல் அதன் உண்மைத் தன் மையை அறியமாட்டார்; இது அவன் திரு உரு இவன் அவன் என - இதுவே அப்பெருமானின் திருவடிவம் இத்திருவடிவம் கொண்டு வந்த இப்பெருமானே அப்பரம் பொருளாயுள்ளவன் என்று நாங்கள் கூறும் படியாக; இங்கு எழுந்தருளி எங்களை ஆண்டுகொள் ளும் - இவ்வுலகத்தில் திருவடிவம் கொண்டு எழுந் தருளி வந்து அடியோங்களை ஆட்கொண்டருளிய; மதுவளர் பொழில் திரு உத்தரகோச மங்கை உள் ளாய் - தேன் மிகுந்த சோலை சூழ்ந்த திருவுத்தர கோச மங்கைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருப் பவரே; திரு பெருந்துறை மன்ூ-திருப்பெருந்துறைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அரசரே; எம் பெருமான் - எங்கள் தலைவரே; எமைபணி கொளும் ஆறு எது அது கேட்போம் - எங்களை ஏவல் கொள் ளும் முறைமை யாது அதனை நாங்கள் கேட்டறிந்து அம்முறையில் நடப்போம்; (ஆதலால்) பள்ளி எழுந் தருளாய் - துயில் நீங்கிப் படுக்கையினின்றும் எழுந் தருள் வீராக. எ-ம்.

அது என்பது "தத்துவமசி" மகாவாக்கியத் தில் தத் என்பதன் தமிழாக்கம். "எங்களை ஆண்டு கொண்டு இங்கெழுந்தருளும்" என்பது பொருளுக் கியைய, இங்கு எழுந்தருளி எங்களை ஆண்டுகொள் ளும் என எச்சங்களின் விகுதி பிரித்துக் கூட்டப்

பட்டது அன்றி, கொண்டெனெச்சத்தைக் கொள்ளவெ னெச்சமாகத் திரிப்பினும் அமையும். "கேட்போம் பள்ளிஎழுந்தருளாய்" என்பது கேட்டறிந்து நாங் கள் அம்முறைமையில் நடத்தல் வேண்டும் ஆதலால் பள்ளிஎழுந்தருள்க எனப் பொருள் கொள்ளுமா றுள்ளது.

8. முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்!
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தோறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறைஉறை கோயிலுங் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்!
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே.

இ-ள்: பந்து அணை விரலியும் நீயும் நின் அடியார் பழம் குடில் தொறும் எழுந்தளிய பரனே - விளையா டும் பந்து பொருந்தும் அகங்கையை உடைய உமை யம்மையாரும் தேவரீரும் அணுக்கன் தொண்டர்களு டைய பழமையான குடிசைகள்தோறும் அவர்களுக்கு அருள்செய்யுமாறு சென்றருளிய மேலானவரே; ஆர் அமுதே - கிடைத்தற்கரிய அமுதம் போன்றவரே; முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய் - தேவரீர் தோற்றம் நிலை முடிவு இல்லாதவராய், உலகத்தில் எல்லாவற்றிற்கும் முற்பட்ட முதற் பெரும்படைப்பும் காப்பும் அழிப்பும் ஆகிய முத்தொழிலையும் செய்ப வராயுள்ளீர்; மூவரும் அறிகிலர்-முத்தொழில் காரணே

சுவரர்களான அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகளும் அதிகார மல மறைப்பால் தேவரீரது உண்மைத் தன்மையை அறியவல்லுநர் அல்லர் அங்ஙனமாயின்; மற்று யாவர் அறிவார் - வேறு எவர் அறியவல்லவர்; செம்தழல் புரை திருமேனியும் காட்டி - சிவந்த தீ போலும் செம்மையான திருவடிவத்தையும் காட்டியருளி; திரு பெரும்துறை உறை கோயிலும் காட்டி- திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் திருக் கோயிலையும் காட்டியருளி; அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய் - அழகிய தண்ணளியினை யுடைய மறையவராதலையும் காட்டியருளி எங்கள் பால் வந்து ஆட்கொண்டருளினீர்; (இன்னும் எங்களுக்கு அருள் செய்யுமாறு) பள்ளி எழுந்தருளாய்- துயில் நீங்கிப் படுக்கையினின்றும் எழுந்தருள்விராக, எ-ம்

"முந்திய முதல் நடு இறுதி" ஆதி சிருட்டி திதி சங்காரங்களைக் குறித்தது. முதலும் நடுவும் முடிவுமில்லாத இறைவரே உலகத்திற்கு முதல் நடுமுடிவுகளைச்செய்ய வல்லவர் என்பது கருத்து.

"பந்தணை விரலாள் பங்க" எனவும் "இலங்கை யதனில் - பந்தணை மெல் விரலாள்" எனவும் இத்திருவாசகத்தும், "பந்துசேர் விரலாள்" எனவும் "பந்தாடு மெல்விரலாள் பாகன்" எனவும் தேவாரத்திலும், "பந்தட்ட விரலினர்" எனவும், "அங்கையந்தலத்தகத்த ஐந்து பந்து" எனவும், "மாலையுட் கரந்த பந்து வந்து கைத்தலத்தவாம்" எனவும், சிந்தாமணியிலும் கூறப்படுதலால் மென்மையான

சிறிய பந்துகள் பலவற்றை மகளிர் அங்கைத் தலத்துக் கொண்டு விளையாடுதலும், அது அவர்களுக்கே உரிய மரபாதலும் அறியப்படும். "வரிப்புனை பந்தொடு பாவை தூங்க" என்னும் திருமுருகாற்றுப்படையும் அதனையுணர்த்தும். ஆனால் அது இக்காலத்து மைந்தர்க்கு மிகவும் உரிய விளையாட்டாயிற்று. விரல் தன்பொருளைவிடாது அங்கைத்தலத்தை உணர்த்தியது.

விளையாடும் போதன்றி மற்றைப்போது பொருந்தாத பந்தினை அங்கை விரலுக்கு அடைமொழியாகக் கூறலாமோ? கூறலாமெனின், அம்மனையனை விரலி கழங்கனை விரலி எனவும் கூற அமையுமோ? எனின் இஃது ஆராய்ச்சிக்குரியதாகும். சான்றோர் செய்யுட்களில் பந்து அடையாகப் பயின்று வந்துள்ளது. பந்தை விரலுக்கு உவமையாக உரைப்பாருமுளர். அது மரபன்று.

இனி பந்தம் பந்து என நின்றதெனக்கொண்டு விரலைப் பந்தித்திருக்கும் விரலணியாகிய மோதிரமெனவும் உரைக்கலாம்.

அணுக்கன் தொண்டர் வாழுமிடங்கள் இறையருள் விளக்கம் பயின்ற பழமையுடையன என்பார், "பழங்குடில்" என்றார். குடில் குடிசையாயினும், அது அடியாரின் இருதய கமலத்தைக் குறிப்பதாகும்.

M. SATKUNAM, M. A.

9 விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே!உன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே!
வண்திருப் பெருந்துறை யாய்!வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே!கரும் பே!விரும் படியார்
எண்ணகத் தாய்! உல குக்குயி ரானாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே.

இ-ள்: விண் அக தேவரும் நண்ணவும் மாட்டா விழு பொருளே - வானுலகத்துள்ள தேவர்களும் அணுகவும் அறியவும் முடியாத சிறந்தபரம்பொருளே; உன தொழுப்பு அடியோங்கள் மண் அகத்து வந்து வாழ செய்தானே - தேவரீருடைய அணுக்கன் தொண்டாற்றும் அடியோம் இப்பூவுலகத்தில் வந்து இன்புற வாழும்படி செய்தவரே; வண் திரு பெரும் துறையாய் - கொடையினையுடைய திருப்பெருந்துறையிலுள்ளவரே; வழி அடியோம் கண் அகத்து நின்று களிதரு தேனே - பழமையான அடியோங்களுடைய கண்ணிலும் அகத்திலும் பொருந்தியிருந்து இன்பமாகிய இனிமை தரும் தேன் போன்றவரே; கடல் அமுதே - பிறப்பு இறப்பு அறுத்தலால் பாற்கடலமுதம் போன்றவரே; கரும்பே – இனிமை தருதலால் கருப்பஞ்சாறு போன்றவரே; விரும்பு அடியார் எண் அகத்தாய் - விரும்புகின்ற அடியவர்களது நினைவிலுள்ளவரே; உலகுக்கு உயிரானாய் - உயிர்களுக்கு உயிராயுள்ளவரே; எம்பெருமான் - எங்கள் தலைவரே; பள்ளி எழுந்தருளாய்-துயில் நீங்கிப் படுக்கையினின்றும் எழுந்தருள்வீராக. எ-ம்.

விளிகள் இறைவனின் தாவில் நல்லிசைகளைக் குறிப்பன. தேவரும் என்பதில் உம்மை உயர்வு. நண்ணாவும் என்பதில் எச்சம். உன என்பதில் ஆறும் வேற்றுமை அகர உருபு உயர்திணையில் வந்தது வழுவமைதி. தொழும்பு மோனை பற்றி வலித்தல் விகாரம் பெற்றது. நாவினன்றிக் கண்ணினும் அகத்தினும் களிதருவதென இத்தேனின் சிறப்புக் கூறப் பட்டது.

10, புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கோள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்!திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் அலரவன் ஆசைப்
படவுநின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கோள்ள வல்லாய்!
ஆரமு தே!பள்ளி எழுந்தரு ளாயே.

இ-ள்: திரு பெருந்துறை உறைவாய் - திருப்பெருந் துறைக் கோயிலில் எழுந்தருளியிருப்பவரே; நாம் புவனியில் போய் பிறவாமையில் நாள் அவமே போக்குகின்றோம்- நாங்கள் பூமியிற் போய்ப் பிறவாமையால் எங்கள் உலகங்களிலிருந்து வாழ்நாளை வீண்நாளாகக் கழிக்கின்றோம்; இந்த பூமி சிவன் உய்யகொள்கின்ற ஆறு என்று நோக்கி-இந்தப் பூவுலகம் சிவபெருமான் உயிர்களை வீடுபெறுமாறு ஆட்கொள்ளுகின்ற முறைமையுடையது என்று கருதி;

திருமால் ஆம் அவன் விருப்பு எய்தவும்-திருமாலாகிய பழைய பெரியோன் விருப்ப மடையவும், அலரவன் ஆசைப்படவும்-தாமரைப் பூவிலிருக்கும் பிரமதேவன் ஆசைப்படவும்; நின் அலர்ந்த மெய் கருணையும் நீயும் - தேவரீரது விரிந்த சத்தாகிய திருவருட்சக்தியாரும் தேவரீரும்; அவனியில் புகுந்து எமை ஆள் கொள்ள வல்லாய் - பூமியிலே போந்தருளி எங்களை அடிமை கொண்டருள வல்லவரே; ஆர் அமுதே - கிடைத்தற்கரிய அமுதம் போன்றவரே; பள்ளி எழுந்தருளாய் - துயில் நீங்கிப் படுக்கையின்றும் எழுந்தருள்வீராக, எ-ம்.

தேவத்தலைவர்களான திருமாலும் பிரமனும் விரும்புவது பூமியிற் பிறத்தலை. ஏன்? "போகபூமியினிற் போக தனுவினைற் பொருந்த லாகா(து); - ஏகமாம் இன்ப சித்தி இயம்பிடில் கரும பூமி - ஆக மானதுகொண்டன்றி;" என்பர் ஆதலால். அவன் என்னும் பண்டறிசுட்டுத் திருமாலின் பழமையையும் பெருமையையும் குறிக்கும். மெய்க்கருணை - சத்தாகிய திருவருட் சத்தியாரைக் குறித்தது. அந்தமிலின்பத் தழிவில் வீடாகிய பரமுத்தியை அருள ஏனைத் தேவரால் முடியாமையால் ஆட்கொள்ள வல்லாய்" என்றார்.

திருச்சிற்றம்பலம்.

**திருமூலர் திருமரபில், சிவசங்கர சுப்பிரமணியதேசிகன் செய்த திருப்பள்ளியெழுச்சியுரை முற்றுப்பெற்றது.**

நாமகள் அச்சகம்,
யாழ்ப்பாணம்.